# 2019 – 2020 ஆம் கல்வி ஆண்டுகளுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞானமாணி பட்டத்திற்கான பல்கலைக்கழக அனுமதிகள்

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக மாணவர்களை தெரிவு செய்வதற்கான பொது தகுதிகாண் பரீட்சை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக மாணவர்களை அனுமதிப்பதற்காக பொது தகுதிகாண் பரீட்சையை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தீர்மானித்துள்ளது. இதற்கமைவாக, மேலேயுள்ள பரீட்சைக்கு அமர்ந்து சித்தியடைவோர் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு அல்லது யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்திற்கான அனுமதிக்காக பரிசீலிக்கப்படுவர். பல்கலைக்கழக அனுமதிகளுக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (பக்கங்கள் 94/95) வழங்கப்பட்டுள்ள **"Admission to the Undergraduate courses of the Universities in Sri Lanka Academic Year 2019/2020"** என்ற கைநூலின் 2.2.8.31 ஆம் பிரிவின் கீழ் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

2019/2020 ஆம் கல்வியாண்டுகளுக்காக பல்கலைக்கழக அனுமதிக்கு பரிசீலிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மேலேயுள்ள கற்கைநெறிகளுக்கான அனுமதிக்காக பரிசீலனை செய்யப்படுவதற்கு அவர்கள் விரும்பினால் அதற்கு மேலதிகமாக இங்கே குறிப்பிட்டுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு அமர்வதற்காக விண்ணப்பித்து சித்தியடைதல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பின்வரும் பரீட்சை நிலையங்களில் தகுதிகாண் பரீட்சையானது ஆங்கில மொழியில் மாத்திரமே நடைபெறுமென தயவு செய்து கவனிக்கவும்.**

| | |
|---|---|
| 01. | மிஹிந்தலை |
| 02. | வவுனியா |
| 03. | யாழ்ப்பாணம் |
| 04. | குருநாகல் |

| | |
|---|---|
| 05. | கண்டி |
| 06. | கொழும்பு |
| 07. | பதுளை |
| 08. | மாத்தறை |
| 09. | மட்டக்களப்பு |

**தகுதிகாண் பரீட்சைக்கான தகுதித்தன்மை:**

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பரிசீலனை செய்யப்படுவதற்காக பமாஆ இன் கைநூலின் 2019/2020 ( 94/95 ஆம் பக்கங்கள்) 2.2.8.31 ஆம் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ள மேலதிக தேவைப்பாடுகளை விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களுக்கான நடைமுறை:**

1. கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக விண்ணப்பதாரிகள் அவர்களின் சொந்த விண்ணப்பப்படிவத்தை ஏ4 அளவுள்ள தாளில் ஆங்கிலத்தில் தயாரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

   *அல்லது*

   http://www.rjt.ac.lk என்ற இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து அல்லது http://www.vau.jfn.ac.lk என்ற யாழ்ப்பாண வவுனியா வளாகத்தின் இணையத்தளத்திலிருந்து மாதிரி விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்யவும்.

   *அல்லது*

   பின்வரும் முகவரிகளிலிருந்து விண்ணப்பப்படிவங்களை கையேற்கவும்.

   1. பரீட்சைகள் மற்றும் கல்விசார் பிரிவு,<br>இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,<br>மிஹிந்தலை
   2. பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை,<br>வவுனியா வளாகம், பார்க் வீதி,<br>வவுனியா.

**கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

2. தகுதிகாண் பரீட்சைக்கான கட்டணமான 1000 ரூபாவை மக்கள் வங்கி அனுராதபுர கிளையின் 008-1-001-8-1725841 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெயரில் சாதாரண பணவைப்பு துண்டின் மூலமாக எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலிருந்தும் பணக்கொடுப்பனவு செய்யலாம். பணவைப்புத் துண்டின் விண்ணப்பதாரியின் நகல்பிரதியானது விண்ணப்பப்படிவத்துடன் அனுப்ப வேண்டுமென்பதையும் அதே வேளையில் அத்துண்டின் நிழற்படப்பிரதியொன்றை விண்ணப்பதாரியின் உபயோகத்திற்காக வைத்திருத்தல் வேண்டுமென்பதையும் தயவு செய்து கவனிக்கவும். காசோலைகள்/காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் 2019 க.பொ.த. உயர்தர சான்றிதழ், க.பொ.த. சாதாரண தர சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் (அல்லது தபாற்கந்தோர் அடையாள அட்டை) அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். (சான்றிதழ்கள் பாடசாலை அதிபரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு உத்தியோக முத்திரை பதிக்கப்படல் வேண்டும்). சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அனுப்பப்படக்கூடாது.

**குறிப்புக்கள்:**

i. விண்ணப்பத்திலுள்ள பெயருக்கும் சான்றிதழ்களிலுள்ள பெயருக்கும் முரண்பாடுகள் ஏதுமிருப்பின் அவைகள் ஒரே நபருடையவையென உறுதிப்படுத்துவதற்காக சத்தியக்கடதாசி ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ii. தகுதிகாண் பரீட்சைக்கான தேவையான அனுமதி தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தும் அபேட்சகர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

iii. பின்வரும் வகையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(அ) தகுதிகாண் பரீட்சைக்கான ஆகக் குறைந்தளவு அனுமதித் தேவைப்பாடுகளை கொண்டிராத அபேட்சகர்.

(ஆ) வங்கியொன்றின் ரொக்கப்பண வைப்புத்துண்டு மற்றும் உரியமுறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 க.பொ.த உ/த மற்றும் க.பொ.த சா/த சான்றிதழ்கள் மற்றும் தேஅஅ/தகஅஅ ஆகியவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இணைக்கப்படாத விண்ணப்பம்.

(இ) பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள்.

(ஈ) மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், அபேட்சகர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணக்கொடுப்பனவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்பட மாட்டாது.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

2020 ஜூன் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் மாத்திரம் பிரதி பதிவாளர், பரீட்சைகள் மற்றும் கல்விசார் பிரிவு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **ICT – Aptitude Test 2019/2020** என தயவு செய்து குறிப்பிடவும்.

**தகுதிகாண் பரீட்சைக்கான திகதி:**

பரீட்சைக்கான திகதி உரிய காலத்தில் அனுமதிப் பத்திரத்தின் மூலமாக அறிவிக்கப்படும்.

மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்:
பிரதி பதிவாளர் (பரீட்சைகள் மற்றும் கல்விசார்) : 025-2266650, நீடிப்பு:- 2141, 2142, 2143
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்.

சிரேஷ்ட உதவி பதிவாளர் (பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள்): 024-2223317
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,மிஹிந்தலை.**
**02.06.2020.**